உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி-கக.] பரீதாபி ஞூ பங்குனிமீ [பகுதி-ரு.

வினைப்பகுபதவிளக்கம்.

இது சுன்னாகம் வித்வான் ஸ்ரீமத்-அ. குமாரசுவாமிப்பிள்ளையவர் களா லியற்றப்பெற்ற வொருவகைச் சொல்லிலக்கண நூல்.

சொல்லிலக்கண நூல்களா லாகும் பயன் பலவற்றுள்ளும் முதன்மையுள்ளது மொழித்திறத்தின்முட்டறுத்தலாம். அம்மொழி ஒருமொழி தொடர்மொழி யென இருவகைப்படும்.

அவற்றுள், தொடர்மொழி யிலக்கணங்களே தொல்காப்பிய முதலிய பலநூல்களாலும் குறைவறக் கூறப்பட்டுள்ளன. ஒரு மொழியிலக்கணம் அவ்வாறு ஒரு நூலாலும் கூறப்பட்டிலது. இது தமிழ்மொழிக்குள்ள குறையுட் டலையாயது.

இவ்விலக்கணம் வடமொழியகத்துக் குறைவற வகுக்கப்பட்டி ருத்தலால் அது சிறப்புற்று விளங்குகின்றது. அவ்வாறே தமிழ் மொழிக்கண்ணும் இவ்விலக்கணம் நிரம்புதல் தமிழ்மொழிவளர்ச் சிக்கு முக்கிய சாதனமாகும்.

வீரசோழியம், பிரயோகவிவேகம் என்னும் நூல்களுள் ஒரு மொழியிலக்கணம் சிறிது விதிக்கப்பட்டிருக்கிறது. அது அவ்விலக் கணம் வகுக்கப்புகுவார்க்கு வடமொழிநெறிபற்றி வழிகாட்டிய துணையே யாவதன்றி வரையறுத்து முடிக்கப்பட்டதன்று.

*

அவ்விலக்கணங்களை யெல்லாம் ஒருவரிருவரால் வரையறுத்துரைத்த லரிதேயாயினும், பிள்ளையவர்கள்போல வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லராய் வழக்குஞ் செய்யுளு மாராய்ந்த புலவர் பலர் புகுந்து ஓரோரிலக்கணத்தை யோரொருவ ராராய்ந்து வரையறுத்து வருவாராயின், அவை நிரம்புத லுடையவா மென்பதி லொரு சிறிதும் தடையில்லை.

அவ்விலக்கணங்களாவன:— பெயரடியாகப் பிறக்கும் பெயர்ப்பகுபத விலக்கணங்களும், வினையடியாகப் பிறக்கும் வினைப்பகுபத விலக்கணங்களும், பெயரடியாகப் பிறக்கும் வினைப்பகுபத விலக்கணங்களும், வினையடியாகப் பிறக்கும் பெயர்ப்பகுபத விலக்கணங்களு முதலிய பலதிறப் படுவனவாம்.

அவற்றுட் பெயரடியாகப் பிறக்கும் பெயர்ப்பகுபத விலக்கணங்களைத் தத்திதாதிகாரத்துட் பலதிறப்படப் பகுத்துக்கூறி முடிப்பர் வடநூலார்.

தமிழிலும் அவ்வாறு பகுத்து முடித்தற் குபகாரமாகுமாறு பலதிறப்படும் பெயர்ப்பகுபதவிலக்கணங்களை யொருவாறுதொகுத்து முன்னமே பிள்ளையவர்களால் இலக்கணசந்திரிகை யெனப் பெயரிட்டு ஒருசிறுநூல் வெளியிடப்பட்டுள்ளது.

அவ்வாறே வினையடியாகப் பிறக்கும், வினைப்பகுபத விலக்கணங்களையும் பெயர்ப்பகுபத விலக்கணங்களையும் வரையறுத்தற் குபகாரமாகுமாறு வினைப்பகுபதவிளக்கம் என்னு மிந்நூலும் பின்னும் பிள்ளையவர்களா லியற்றி வெளியிடப் பெற்றிருக்கிறது.

இந்நூலுட் சற்றேறக் தாழ மூந்நூற்றைம்பது வினைப்பகுதிகளை ஈறுபற்றி வேறுபடவகுத்து, அவற்றினடியாகப் பிறக்கும் வினைப்பகுபதங்களாகிய தொழிற்பெயர், வினையெச்சம், பெயரெச்சம், வினைமுற்றென்னு மிவற்றின் வடிவு தோன்ற வரலாறு காட்டியும், அப்பகுதியடியாகப் பிறக்கும் சில பெயர்வேறுபாடுகளும், அவற்றிற்கேற்ற சில விகுதிபெறு முறைகளும், துணைவினைப் பகுதி வருநெறிகளும், சில பகுதிகள் திரிந்து விகாரப்படும் வகைகளும், சில பகுதிகள் விகுதியாற் பொருள்வேறுபடுந் திறங்களுமாகிய பலவகை

யிலக்கணங்களைத் தெளிவுபெறக் காட்டியும், அரிய சொற்களுக்குப் பொருளுரைத்தும், அவை அப் பொருளில் ஆன்றோரால் வழங்கப் பட்டனவெனப் பிரயோகங் காட்டியு முடிக்கப் பெற்றிருக்கிறது.

இதிலமையாத சிலவற்றைப் பிள்ளையவர்கள் "செந்தமிழ்"க் கெழுதி வரும் வினைப்பகுதிவேறுபடுகை என்னும் பொருளுரையிற் சேர்த்திருக்கின்றனர்.

இது தமிழில் வினைப்பகுதியடியாகப் பிறக்கும் ஒருமொழி யிலக் கணத்தை வரையறுக்கப் புகுவார்க்குப் பெரிது முபகாரமாகு மென் பதி லொருசிறிதுந் தடையின்று.

இது கொண்டு இன்னும் தமிழிலுள்ள வினைப்பகுதிகளை யெல் லாம் ஈறுபற்றி இத்துணையென வரையறுத்துச் செய்கைவேறுபாடு நோக்கி வேவ்வேறு விகரணங்களில் வைத்துப் பொருளுரைத்து வட நூலாரோதும் தாதுபாடம் போல்வதோ ரிலக்கணநூலி னுறுப்பா யமைத்தலு மெளிதாகும்.

அஃதமைக்கவே அதனையடுத்த இடைநிலை, சாரியை, சந்தி, விகார முதலிய வொருமொழி யிலக்கணங்களையெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக வரையறுத் துரைக்கவு மியலும்.

இத்தகைய இலக்கணநூல்களே தமிழ்மொழி வளர்ச்சிக் கின்றி யமையாத சாதனங்களாகுமென வெல்லாராலுஞ் சொல்லத்தக்கன.

இன்னு மிவ்வாறுய பல இலக்கணங்களை இயன்றவரை தொகுத் துத் தமிழுலகுக் குபகரித்துவருமாறு பிள்ளையவர்கள் நீண்ட ஆயு ளும் அரோகதிட காத்திரமு முடையராய் வாழ விறைவனருள் புரிக.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

அந்தகக் கவிவீரராகவர் காலம்.

மேற்கூறிய பெயர் தரித்த புலவரொருவர் பண்டைக் காலத்தி லிருந்தனரென்பது தமிழ் நூலறிவுள்ள யாவரும் ஒத்துக்கொள்வர். இவரைப் பற்றிச் சென்னைச் சர்வகலாசாலையாரால் பீ. ஏ. பட்டஞ் சூட்டப்பெற்றவரும் தமிழ்வித்துவானுமாகிய குப்புசாமிமுதலியா ரவர்கள் (1) சிலவரலாறுகளைத் திரட்டி வரைந்துள்ளார். இப்பெருங் கவி காஞ்சிபுரத்துக் கணித்தான பூதூரிலே வடுகநாத முதலியாருக் குப் புத்திரராய் உதித்தனர். இவர் இருகண்ணுந்தெரியாத பிறவிக் குருடராய் இருந்தனர். இவர் குடும்பத்தார் இவர் காலத்திலேயே பூதூர் நீங்கி அதற் கருகிலுள்ள பொற்களந்தை குடிபுக்கனர். பின் னர் இவ்வந்தகர் காஞ்சிபுரஞ் சென்று கல்விபயின்று பிறகு கல்வி யிற் சிறந்து விளங்கினர். இவ்வந்தகக் கவியார் செய்யூரில் கோயில் கொண்டிருக்கும் முருகவேள் பேரிலே ஒரு பிள்ளைத்தமிழ்நூலும் கலம்பகமும் இயற்றினதுமன்றி அந்நகர அதிபரான அம்மையப்ப முதலியார் என்றவர் பேரிலும் பிள்ளைத்தமிழொன்று பாடியுள்ளா ரென்றுந் தெரியவருகின்றமையால் அவர் அச்செய்யூர் வேளாள ரோடு மிகவும் பழகி உறவுகொண்டிருந்தன ரென்பது வெளிப்படை யாம். இனி, அவர்தன்னூராகிய பொற்களந்தையில் தன் மனையா ளோடு வாழுநாட்களில் ஒரு நாள் அவர் வெளிச்சென்று திரும்பி வருவதை அங்கிருந்தவர்களிலொருவர் அவர்மனையாளுக்குத் தெரி விக்க அவள் "தமது வித்துவத்திறமையினால் யானைக்கன்றும் வள நாடும் பெற்றுவந்தனரோ" என்று சொல்ல, அதைக்கேட்ட புலவர் தம்வறுமையையுன்னி மனைவியார் தம்மை இகழ்ந்தனரென்று மனதி லெண்ணிப் பொருள் தேடும் நோக்கமாக ஒரு குற்றேவலாளையுந் தன் னுடன் கூட்டிக்கொண்டு தேசயாத்திரை சென்றனர். அவர் சோழ நாட்டிலே சிலகாலம் தங்கியபின் ஈழத்துக்குச் சென்றனர். அக் காலத்தில் "பரராசசிங்கனென்போன் ஈழத்துக் கரசனாயிருந்தான். அரசரும் அவர் அவையோரும் அந்தகருடைய புலமையையும் யாழ்

1. முதலியாரவர்கள் பதிப்பித்த "செய்யூர்முருகன்பிள்ளைத்தமிழ்" "நூலா சிரியர் வரலாறு" பார்க்க.

வாசிக்குந் திறத்தினையும் வியந்து அவர்க்குப் பற்பல பரிசளித்தனர். அவற்றில் (2) யானைக்கன்றும் (3) பொற்பந்தமும் முக்கியமானவை. இத்தருணத்தில் கவிராயர் அரசனைப்புகழ்ந்து பாடியபாக்களில் அவரை "வீரபராசசிங்கம்" என்றும் தன்னை "யாழ்ப்பாண" னென்றும் கூறியுள்ளார். "என்னொருவாய்க்கு இரைதேடுவதே பெருந் தொல்லையாயிருக்க அரசர் கொடுத்த நால்வாய்க்கு எங்ஙனம் இரை தேடுவது" என்று அந்தகர் புலம்ப, அரசர் அவ்வானை வளரும்படியான நாடுங்கொடுத்தாராம். சிலவருஷங்களுக்கு முன்னே எனக்கு வாசிக்கக்கிடைத்த சோழமண்டல சதகப் பிரதியொன்றிலே (4) இக் கவிராயர் பாடிய சிலபாக்களும், இவரைப்பற்றிய சில செய்திகளுமிருந்தன. அதிலே சோழவரசன் ஈழத்தை வெற்றிகொண்ட சங்கதியைக் கேள்வியுற்ற கவிராயர்மனைவியார் வெளிச்சென்று வீட்டுக்குத் திரும்பிவருகிறவரான தனது நாயகனை நோக்கி "அரசன் ஈழத்தை வெற்றிகொண்டானும். அவர்மீது கவிபாடி யானையொன்று பெற்று வருகின்றீரோ" என்று கேட்க அவர் அக்குறிப்பை அறிந்து வேந்தனிடஞ்சென்று அவர்மீது கவிபாடி யானையொன்று பரிசாய்ப் பெற்றனரென்று கூறப்பட்டுள்ளது. யாழ்ப்பாணவைபவத்தின்படி பரராசசிங்கனது தந்தையார் பட்டத்துக்கு வந்து வன்னியராலும்

---

2. யானைபெற்றதற்குப் பாடிய விருத்தம்.

"இல்லெனுஞ் சொல்லறியாத சீமையில்வா ழுதானனைப்போய்
யாழ்ப்பாணன் யான்
பல்லைவிரித் திரந்தக்கால் வெண்சோறும் பழந்தூசும்
பாலியாமற்
கொல்லநினைந் தேதனது நால்வாயைப் பரிசென்று
கொடுத்தான் பார்க்குள்
தொல்லையென தொருவாய்க்கும் நால்வாய்க்கு மிரையெங்கே
துரப்புவேனே"

3. பொற்பந்தம் பெற்றபோது பாடிய வெண்பா.

"பொங்குமிடி யன்பந்தம் போயதே யென்கவிதைக்
கெங்கும் விருதுபந்த மேற்றதே—குங்குமந்தோய்
வெற்பந்த மானபுய வீரபரராசசிங்கம்,
பொற்பந்த மின்றளித்த போது"

4. இது "பிறிற்றோப் பிள்ளை" யவர்களுடைய விரிகாமத்துப் பெருந் தோட்டத்திலிருந்த புத்தகசாலையிலே கிடைத்தது.

சிங்களராலும் துரத்தப்பட்டுத் தம்மனைவியோடும் மிகவும் இளைஞ ரான தமது குமாரரோடுங் கோவலூர்க்குத் தப்பியோடி அங்கே நெடுங்காலமிருக்க "விஜயவாகு" வென்ற சிங்களவரசன் யாழ்ப் பாணத்தை ஆண்டுகொண்டிருந்தான். அவர் குமாரர் பெரியவர்க ளானபோது மதுரையை யடுத்தநாடுகளிலே ஒரு சேனையைத்திரட்டி ஈழஞ்சென்று பெரும்போர்புரிந்து, சிங்களவரசைக் கவிழ்த்து, மறு படியும் யாழ்ப்பாணத்துக் கரசராய்ச் சிம்மாசனமேறினர். பின்பு அவர் வயோதிபம் மேலிட ராஜ்யப் பொறுப்பைத் தம்மகன் பராச சிங்கனிடம் ஒப்புவித்துச் சிம்மாசனம் விட்டிறங்கச் சயதுங்கனை பாராசசிங்கன் ஈழத்துக் கரசனாயினன்.

நெடுங்காலம் காஞ்சிபுரத்திலும் அதையடுத்த நாடுகளிலும் வாசஞ்செய்துகொண்டிருந்தவரான அந்தகக் கவியார் அந் நகரத்துக் கணித்தான கோவலூரிலே ஈழத்தரசன் தன் குடும்பத்தோடு பல் லாண்டுகளாய்த் தங்கியிருந்த செய்தியை அறிந்திருந்தாரென்று நினைத்தற்கு இடமுண்டன்றோ. இனி, பாராசசிங்கனது தந்தையார் சிங்களரை வென்று ஈழத்தைக் கைப்பற்றின செய்தி சோழநாடெங் கும் ஒய்யென பாவியிருக்குமன்றோ. இந் நற்செய்தியைக் கேள்வி யுற்றே கவிராயர் மனைவியார் அவரை ஈழஞ்செல்லும்படி ஏவின ளென்னல் இழுக்காகாது. சிலகாலம் கவிராயர் ஈழத்தரசனிடமிருந்து அவ்வூர்ப் புலவரெல்லோரையும் தமது கல்வித் திறமையினால் மகிழ் வித்துக்கொண்டிருந்தார். பராசசிங்கரும் அந்தகருடைய புலமை யை வியந்து அவர்மீது பாக்கள் சில (5) வியற்றினர். பின்னர்க்

---

5. **கவிராயர்மீது பராசசிங்கம் பாடியது.**

"இன்னங் கலைமகள் கைம்மீதிற் புத்தக மேந்தியந்தப்
பொன்னம் புயப்பள்ளி புக்கிருப் பாளென்ன புண்ணியமோ
கன்னன் சயந்தன் **கவிவீர ராகவன் கச்சியிலே**
தன்னெஞ்ச மேடெனக் கற்றான் கனமுத் தமிழையுமே"

ஆநந்தலாவைக்கேட்டுப் பராசசேகரன் (பராசசிங்கம்) பாடியது.

புவியே பெறுந்திரு வாரு ருலாவைப் புலவர்க்கெல்லாஞ்
செவியே சுவைபெறு மாறுசெய் தான்சிவ ஞானமனு
பவியே யெனுநங் கவிவீர ராகவன் பாடியநற்
கவியே கவியவ னல்லாத போர்கவி கற்கவியே"

கவிராயர் தான்பெற்ற பல்லக்கு முதலிய பரிசுகளுடனும் பரிவாரங்களுடனும் தான்பிறந்த ஊர்க்குத் திரும்பிப்போயினர். தன்னூர்க்குப் போகும்போது திருநெல்வேலியிலுள்ள கயத்தாற்றரசன் பேரில் ஓர் உலாப்பிரபந்தம் பாடினர். இக்காலத்திலேயே அந்தகர் "கிருஷ்ணப்ப வாணன்" என்ற வோர் அரசர்மீது சீட்டுக்கவியொன்று பாடியனுப்பி அவரையுங்கண்டு பரிசுகள் பல பெற்றனரென்றும் (6) அக் காலத்திலிருந்த "திம்மைய அப்பையன்" என்னு மொரு பிரபுவின் கேள்விப் படி 'திருக்கழுக்குன்றப் புராணத்தைப்' பாடினரென்றும் (7) தெரிய வருகின்றது. இப்படிப் பல்வேறிடங்கள் சென்று பாடிப் பரிசுகள் பெற்றுத் திரும்பித் தன் ஊர்சேர்ந்து தன் மனையாளுக்குத் தான் பெற்ற பரிசுகளையும் காண்பித்து அவளுடனிருந்து பலநாள் இல்லற நடாத்திக் காலப்போக்கில் அம்மைக்குச்சென்றனர். இவர் வழித் தோன்றியவரென்று பரம்பரையாய் அறியப்பட்டோர் இவரிருந்த நாட்டிலே இன்றுமுள்ளனராம்.

இவ் வந்தகக்கவியார் எக்காலத்தவரோவென்பது இனி ஆராயத் தக்கது. பின் சொல்லப்படும் காரணங்களைக்கொண்டு அந்தகர் 17-ம் நூற்றாண்டின் கடைப்பகுதியில் இருந்திருக்கலாமென்று குப்புசாமி முதலியார் நினைக்கின்றனர். *கி. பி. 1685-ம் ஆண்டு துவக்கம் 1728-ம்

---

(6) கவிராயர் கிருஷ்ணப்பவாணன்மீது பாடிய சீட்டுக்கவி.

"இனிதினி தெனச்சேர சோழபாண் டியர்மெச்சு மிச்சித்த மதுரவாக்கி
யீழமண் டலமளவு திறைகொண்ட கவிவீர ராகவன் விடுக்குமோலை
வனிதையர் விகாரமன் மதராஜ ரூபன்மயி லையாதி பதிசக்கிர
வாளத்தி யாகிநங் காளத்தி கிருஷ்ணப்ப வாணனெதிர் கொண்டுகாண்க
கனதமிழ்த் துறையறி மரக்கலங் கன்னிகாமாட நன்னூற்
கட்டுபேர் கொட்டாரம் வாணிசிங் காதனங் கவிநாட கஞ்செய்சாலை
வினவுசிவ காதையிற் சர்க்கரை யெனத்தக்க வினையே னுடம்புநோயால்
மெலியுமோ மெலியாத வகைபால் பெருத்தொரு மேதிவர விடவேணுமே."

(7) திம்மைய அப்பையன்மீது பாடிய சீட்டுக்கவி.

"இந்நா ளிருந்தபேர் புதியபா கம்பண் டிருந்தபேர் பழையபாக
மிருபாக மும்வல்ல லக்கணக் கவிவீர ராகவன் விடுக்குமோலை
அன்னதி தானப்பிர வாசன்பிர சங்கத் தனந்த சேடாவதார
னகிலப்பிர காசன்திம் மைய வப்பையன் மகிழ்ந்து காண்க
தன்னுரு மோலையும் வரக்கண்டு நாம்வேத சயிலப் புராணத்தையித்
தனைநா ளிருந்தோதி னேமரங் கேற்றுவது தான்வந் தலாமலில்லை
நன்னுவ லோருட னிதைக்கேட் டெனைச்சோழ நாட்டுக் கனுப்பவேணும்
நவிலோலை தள்ளாம லேசுக்கிர வாரத்து நாளிங்கு வரவேணுமே."

ஆண்டுவரைக்கும் இராமநாதபுரத்தில் அரசாண்டிருந்த இரகுநாத சேதுபதியின் சமஸ்தான வித்துவானுயிருந்த படிக்காசுப் புலவருக்குக் குருத்துவம் வகுத்தவரும் இலக்கண விளக்கவாசிரியருமான வைத்தியநாத நாவலரைப் புகழ்ந்து இவர் ஒரு வெண்பாப் பாடியிருக்கின்றாரென்றும் மேற்சொன்ன இரகுநாதசேதுபதிக்குமுன் அரசாண்ட சேதுபதியின்பேரிற் கோவைநூலொன்று செய்த அமிர்த கவிராயரும் இவரும் ஒரே காலத்தவரென்றும் இவர் தமது சீட்டுக் கவியிற் குறித்த "திம்மைய அப்பையன்" கி. பி 1680-ம் வருஷம் வரையில் செங்கற்பட்டிலும் சென்னையிலும் இருந்து கனவானென்று புகழ்படைத்த "திம்மையநாயக்கன்" என்னலாமென்றும் இவர் வம்சத்திலிப்போதிருக்கும் கவிராயர் "ஸ்ரீநிவாச முதலியாரவர்கள் இவரது எட்டாவது தலைமுறையிலுள்ளவரென்றும் காட்டி இவர் இருந்த காலம் கி. பி. 1660-ம் வருஷம்வரையில் என்று கொள்ளலாமென்று குப்புசாமிமுதலியார் கூறுகின்றனர்.

அந்தகர் காலம் இவ்வளவு தூரம் பிந்திப்போவதற்கு முதலியாரவர்கள் எடுத்துக்காட்டிய நியாயங்கள் போதுமானவையாய்த் தோன்றவில்லை. ஏனெனில் அவர் எக்காலத்தவரோ என்பதைத் துணிதற்கு அவர்பாடிய கவிகளிலுள்ளகுறிப்புக்களையேஆதாரமாகக் கொள்ளல்வேண்டும். இவர் இயற்றியதாக முன் சொல்லப்பட்ட பிள்ளைத்தமிழில் சிறுதேர்ப்பருவத்து ஆறுவது செய்யுளில் (8) சகாப்தம் 1443-ல் அதாவது கி. பி. 1521-ல் அவ்வூர் முருகன் ஆலயம் திரும்பக்கட்டப்பட்டபின் முதற்றிருவிழா ஆரம்பிக்கப்பட்டு நடந்ததெனக் கூறப்பட்டிருக்கின்றது. ஆகவே அந்தகர் 15-ம் நூற்றாண்டின் கடைப்பகுதிக்கு முற்பட்டவரல்லர் என்பது ஐயமின்றிக் கொள்ளக்கிடக்கின்றது. கவிராயர் மேற்கூறியசெய்யுளிலே

(8) பௌவத் தலத்தெழு சகாப்தமோ ராயிரத்
தொருநாலு நூற்றின் மேலும்
பயிலுநாற் பத்தமு வருடமாம் விடுவருட
மகரம் பகுத்த இருநாட்
டெய்வத் திருத்தே ருருட்டியத்து போலவிச்
சிறுதே ருருட்டி யருளே
செய்கையாய் சரவணப் பொய்கையாய் தோகையாய்
சிறுதே ருருட்டி யருளே.
"செய்யூர்முருகன்பிள்ளைத்தமிழ்" 76, 77-ம் பக்கங்கள் பார்க்க.

வருடத்தையும் "மகரம்பகுத்த திருந்"னென்று மாதத்தையு மாத்திரம் சொல்லி, வாரம், நக்ஷத்திரம், திதி, யோகம், கரண முதலியவற்றைச் சொல்லாது விட்டமையான் அக்கவி எழுதப்பட்டது. அத்தேதிக்கு அநேக வருஷகாலம் பிந்தியேயென்று குப்புசாமி முதலியார் நினைக்கின்றனர். இக் காரியத்தில் முதலியார் கூற்றுத்தக்க ஆதாரங்கொண்டு நிற்பதாய்த் தோன்றவில்லை. காலங்குறிப்போர் பிற்காலத்தார்க்கென்று எப்போதும் தீர்க்கமாய் எழுதுபவரல்லர். ஆகவே திதியோகம் முதலிய விவரங்களைக் காட்டாமல்விட்டது அக்காலத்துக்கு மிகப் பிந்தியவரென்பதைக் கிஞ்சித்தேனும் உறுதிப்படுத்தமாட்டாது. ஈழத்தரசன் பரராசசிங்கனையும் நமது கவிராயர் தமதுகவிகளில் குறித்திருக்கின்றாரென மேற்சொல்லப்பட்டது. இப்பரராசசிங்கன் காலமெதுவென நிச்சயித்தல் கூடுமாயின், கவிராயர் காலமும் இதுவென ஐயமின்றித் துணிதல் கூடியதாகும். ஈழத்தை ஆண்டவரென வைபவத்தில் குறிக்கப்பட்டுள்ள அரசர்வரிசையில் (9) "பரராசசிங்கன்" என்ற பெயரையுடைய அரசர் ஒருவரே. 16ம் நூற்

---

(9) இவ் வரசனுடைய முழுப்பெயர் "பரராசசேகர சிங்கையாரியன்" என்றும் "சிங்கைப் பரராசசேகரன்" என்றும் "வைபவம்" சொல்லுகின்றது. (Vide English Translation of "Yalpana" "Vaipavamalai" by the late C. M. Britto Esq. p. 25.) இவர் தந்தையாருக்கும் யாழ்ப்பாணத்தை ஆண்டுகொண்டிருந்த சிங்கள அதிபதிக்கும் நேரிட்ட செருமுகத்தில் பரராசசேகரன் அவ் வதிபதியின்மேற் சிங்கத்தைப் போலப் பாய்ந்து அவனை வெட்டிக் கொன்றனனென்றும் அவ் வதிபதியின் பெயர் "விஜயவாகு" என்றும் மேற்கூறிய நூலிற் சொல்லப்பட்டுள்ளது. (Vide idem p. 25.) சிங்கள இதிகாச நூலாகிய "இராஜவழியில்" சொல்லியிருப்பதோடு இது சற்றே முரணும். ஏழாம் விஜயவாகு என்பவன் கொழும்பிலிருந்து சில காததூரத்திலுள்ள பழைய "ஜயவர்த்தனபுரம்" என்ற நகரத்திலிருந்து ஆண்டுகொண்டிருந்தவனென்றும் அவனுக்குக் கீழான ஒரு "கருணதிபதி" (கருமத்தலைவன்) யாழ்ப்பாணத்திலிருந்தானென்றும் கூறப்பட்டுள்ளது. (Vide Rajavaliya edited by B. Gunesekera Mudaliar pp: 74—5). இவன் பெயரும் "விஜயவாகு" வென்றிருந்திருக்கலாம். பரராசசேகர சிங்கன் செருக்களத்திற் காட்டிய உக்கிர தீரத்தையும் கைக்கொண்ட வெற்றியின் மேன்மையையும் நோக்குங்கால் அவனுக்கு "சயதுங்கவீரபரராசசிங்கன்" என்ற பெரும்பெயர் நனிபொருந்துமன்றே.

பரராசகேசரி (பரராசசிங்கன்) 17-ம் நூற்றூண்டின் முதலிலிருந்ததாகத் தெரியவருகின்றதென முதலியார் எழுதியுள்ளார். பரராசசேகரனுடைய பௌத்திரன் ஒருவர் "பரராசசிங்கன்" என்றபெயரையுடையராய் 17-ம் நூற்றூண்டின் முதற்பகுதியில் இருந்தனரென்பது உண்மையே. ஆயின் அவர் ஈழத்தரசனாய் இருந்தவரல்லர். அவர் தமதுபாட்டனார் பெயராகிய பரராசசிங்கன் என்ற பெயரினால் வழங்கப்பட்டனர் என்று 'வைபவம்' கூறுகின்றபடியால் 'பரராசசிங்கன்' என்ற பெயர் பரராசசேகரனுக்கு முந்தி வழங்கப்பட்டது என்பது உண்மைப்படுகின்றது. யாழ்ப்பாணச்சரித்திர மென்ற வேறொரு நூலிலும் "பரராசசேகரன்" "பரராசசிங்கன்" என்று வழங்கப்படுகின்றான். (Vide Vaipavamalai p. 32 and Yalpana Charitram p. 34.)

ற்றாண்டின் நடுப்பகுதியில் பிரான்சிஸ் சாவியரால் கிறீஸ்தவ மார்க்கத்துக்குத் திருப்பப்பட்ட மன்னார் தேயத்துக் குடியானவரில் அநேகரைக் கொலைசெய்வித்த "சங்கிலி" என்ற யாழ்ப்பாணத்தரசன் இப்பரராசசிங்கருடைய மகனேயாவன். ஆகையினால் சங்கிலி அரசன் தந்தையார் 16ம் நூற்றாண்டின் முதற்பகுதியில் இருந்தவராதல் வேண்டும். 17ம் நூற்றாண்டின் முதற்பகுதியில் ஈழநாடு வேற்றரசர் கைக்குட்பட்டுத் தன்னரசை முழுதும் இழந்துவிட்டபடியினால் ஈழநாட்டரசன்மீது கவிபாடிய கவிராயர் இக்காலத்துக்கு முந்தினவராதல் வேண்டும். பராசசிங்கனது தந்தையார் காலத்துச் சிங்கள அரசன் "விஜயவாகு" என்றும் வைபவம் கூறுகின்றது. 7ம் "விஜயவாகு" கி. பி. 1505ம் வருஷமுதல் 1534ம் வருஷம் வரைக்கும் அரசு புரிந்தவனாகையால் பரராசசிங்கன் காலம் 16ம் நூற்றாண்டின் முதற்பகுதியே யென்று அமைகின்றதன்றோ. மேற்குறித்த விஜயவாகுவின் காலத்தில் யாழ்ப்பாணம் சிங்கள அரசுக்குட்பட்ட நாடாக விருந்ததென்பது சிங்கள இதிகாசங்களிலும் கூறப்பட்டுள்ளது. கவிராயர் தம்சீட்டுக்கவியொன்றில் 'திம்மைய அப்பையன்' என்னுமொரு பிரபுவைத் தன்காலத்துள்ளோராகக் குறித்திருக்கின்றனரென்று முன் சொன்னோம். இப்பெயரை யுடைய ஒருவர் விஜயநகரத்தில் கி. பி. 1509ம் ஆண்டு துவக்கம் இருபது ஆண்டுகளுக்கு (1529ம் வருஷம் வரைக்கும்) அரசராயிருந்த "கிருஷ்ணதேவராயருக்கு மந்திரியாயிருந்து (10) புகழ்பெற்று விளங்கினவர். கிருஷ்ணப்பவாணனென்று அந்தகர் தம்சீட்டுக்கவியிலே குறித்திருப்பவர் இக்கிருஷ்ணதேவராயரே (11) யென்று ஊகித்தல் மிகப் பொருந்தும். மேற்

(10) நரசிம்மலு நாயுடு அவர்கள் செய்த "தக்கண இந்தியாவின் சரித்திர சார சங்கிரகம்" 70-ம் பக்கம் பார்க்க.

(11) கிருஷ்ணதேவராயர் விஜய நகர அரசர்கள் எல்லோரிலும் அதிக புகழ்படைத்தவராய் இருந்தவர். இவரே கூர்ச்சரம் மகதம் முதலிய வடநாடுகளைக்கைப்பற்றி அநேக ராஜாக்களை அடக்கி ஆண்டுவந்தனர். இவர் வடநாடுகளை வென்ற செய்தியைக் குறித்தே "இவரைச் சக்கரவாளத்தியாகி" என்று அந்தகக்கவியார் தமது சீட்டுக்கவியில் சொன்னாரெனல் பொருத்தமுடையது. "சரித்திரசாரசங்கிரகம்" 91—ம் பக்கம் பார்க்க.

குறித்த திம்மைய அப்பையன் "திம்மராஜா" என்றும் "திம்மாராஜா அப்பாயு" என்றும் வழங்கப்பட்டுள்ளார். அவர் சாளுவம் என்ற வொரு சிறு கிராமத்தில் ஓர் எளிய பிராமணக் குடும்பத்திற் பிறந்து தம் கல்வித்திறமையினாலும் விழுமிய நடைகுணாதிகளாலும் உயர் நிலையடைந்து கௌரவம் பெற்றவர். அவர் பிராமணராய் இருந்தமையானுக்கும் "திம்மைய" (திம்ம+ஐய) ரென்று அழைக்கப்பட்டனர். இதுகாறும் வரைந்துள்ள உண்மைகளால் அந்தகக் கவியார் காலம் 16ம் நூற்றாண்டின் முதற் பகுதியே யென்பது அங்கையில் ஆமலகம் போல் தெள்ளிதின் விளங்கும்.

(தொடரும்)

வே. ஜோ. தம்பிப்பிள்ளை. (M. R. A. S.)

உ

செந்தமிழ்த் தொகுதி-10 பகுதி-12 ல் வெளியான

7-ஆவது ஐயவினாவின் விடையுரை ஆராய்ச்சி.

7-ஆவது வினா:— புதல்வரைப்பெறுதல் என்ற அதிகாரப் பெயர்க்கு "இருபிறப்பாளர் மூவரானு மியல்பாக விறுக்கப்படுங் கடன் மூன்றனுள் முனிவர்கடன் கேள்வியானும், தேவர்கடன் வேள்வியானும், தென்புலத்தார்கடன் புதல்வரைப்பெறுதலானுமல்ல திறுக்கப்படாமையின் அக்கட னிறுத்தற்பொருட்டு நன்மக்களைப் பெறுதல்" என்று விவரண மெழுதப்பட்டிருக்கிறதே ; இவ் வதிகாரத்துக்கு இருபிறப்பாளர் மூவரே இலக்காகவும், நான்காம் வருணத்தவர் விலக்காகவுங் கொள்ளுதல் பொருந்துமா? விலக்காயின், உரைப்பாயிரத்துள் "ஈண்டுத் தெய்வப்புலமைத் திருவள்ளுவராற் சிறப்புடைய வொழுக்கமே அறமென வெடுத்துக்கொள்ளப்பட்டது.

அதுதான் நால்வகை நிலைத்தாய் வருணந்தோறும் வேறுபாடுடைமையின், சிறுபான்மையவாகிய சிறப்பியல்புகளொழித்துப் பெரும் பான்மையவாகிய பொதுவியல்புபற்றி இல்லறம் துறவறமென இருவகை நிலையாற் கூறப்பட்டது” என்பதுடன் எவ்வாறு பொருந்தும்?

2. விடை:—முக்கடனுக்கி நின்றது. விலக்கன்று. என்பது.

3. விடையுரையின் கருத்து:—நான்காம் வருணத்தவர்க்கு விதிக்கிலக்காகாமையாலும் அவற்றின் மறுதலைச்செயலன்மையாலும் அறனும் அறன்கடையு மாகாது விழைவன புரிதலின் பாற்படும் ஐம்புலநுகர்ச்சிபோல இல்லறத்துள் இன்பம் பயப்பதோர் உலக நடையா மென்பது கருதியே முக்கடனுக்கி நின்றது. விலக்கன்றென்று விடைகூறப்பட்டதென வுணர்க. என்பது.

4. விடையால் பெறப்படுவது சதுர்த்தருக்குப் பிதிர்க்கடனாற்றற்பொருட்டுப் புதல்வரைப்பெறுதலென்னு மொழுக்கம் விதி. என்பது. அதன் உரையின் கருத்தால் பெறப்படுவது சதுர்த்தருக்குப் பிதிர்க்கடனாற்றற்பொருட்டுப் புதல்வரைப்பெறுதலென்னு மொழுக்கம் விதியன்றெனினும் அது விதி விலக்குகளாகாது விழைவன புரிதலின்பாற்பட்டு உலகநடையாமென்பது. இவ்வாறு விடையும் அதன் உரையும் ஒன்றுக்கொன்று மாறுபட்டுக்கிடத்தல் மிக்க வியப்பே! விடையை விளக்க உரையெழுதப் புகுந்தார் அதன் கருத்தைத் தழுவியன்றோ எழுதுவது சிறப்பு. அங்ஙனமெழுதாது மற்றொன்றுகூறி மலையவைப்பது எது கருதி? விடை தவறாயின் அது தப்பென்று காட்டித் தாம் கண்ட உண்மைப்பொருளையன்றோ விளக்கல் வேண்டும். அது குற்றமாகாமல் அறிஞர் ஒப்பத்தக்கதாம். இது நிற்க.

5. இனி விடை உரைகளில் பலம் பலமின்மையைச் சிறிது ஆராய்ச்சிசெய்து முடிவுகொள்வாம்.

6. ஸ்ரீமத்-மு. ராகவையங்கார் முதலிய சில்லோர் அச்சிட்ட திருக்குறட் பிரதிகளில் புதல்வரைப்பெறுத லென்னு மதிகாரமுகத்தில் முக்கடன்களி லொன்றாகிய பிதிர்க்கடனிறுத்தற்குப் புதல்வரைப்

பெறுதல் இருபிறப்பாளர்கட்கு உரித்தென்னும் பொருள்பட எழுதியிருக்கிறது. திருத்தணிகை ஸ்ரீமத்-சரவணப்பெருமாளையர், களத்தூர் தமிழ்ப்புலவர் ஸ்ரீமத்-வேதகிரிமுதலியார் முதலிய பல்லோர் அச்சிட்ட திருக்குறட் பிரதிகளில் புதல்வரைப்பெறுத லென்னு மதிகாரமுகத்தில் நால்வகை வருணத்தார்க்கும் பொதுப்படப் பிதிர்க்கடனியற்றற்குப் புதல்வரைப்பெறுத லுரித்தென்னும் பொருள்படக் குறித்திருக்கின்றது. இங்ஙனம் திருக்குறட் பிரதிகளில் இருவிதமாயிருக்க எங்ஙனம் திருக்குறள்கொண்டு பிதிர்க்கடனியற்றற்குப் புதல்வரைப்பெறுதல் துவிஜர்கட்குமட்டும் விதியுடைத்தென்றும் சதுர்த்தருக்கு மட்டும் விதியுடைத்தன்றென்றும் துணிந்து கூற முடியும்?

7. உரையாசிரியராம் பரிமேலழகரும் உரைப்பாயிரத்தில் நால்வகை வருணத்தார்க்கும் பொதுவாதல் பற்றி இல்லறம் துறவறமென எடுத்துக்கொண்டார் வள்ளுவரெனக்கூறி, வருணபேத மொழித்ததுபோலத் துறவறவியலில் கொல்லாமை என்னு மதிகாரத்தின் 2-ஆவது பாட்டு விசேடவுரையில் "எல்லாநூல்களினும் நல்லனவெடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கியல்பாகலின் ஈண்டும் பொதுப்பட நூலோரென்றும், அவரெல்லார்க்கும் ஒப்ப முடிதலான் இது தலையாய வறமென்றுங் கூறினா" ரென்றும் ஷை அதிகாரம் 5-ஆவது பாட்டு விசேடவுரையில் "துறவு ஒன்றேயாயினும், சமயவேறுபாட்டால் பலவாமாகலின், நீத்தாருளெல்லாமென்றா" ரென்றும் நூலாசிரியர் வசனங்காட்டிச் சமயபேதத்தோடு வருணபேதமு மொழித்தது காண்க. நூலாசிரியராம் வாய்மைத் திருவள்ளுவரும் அறத்துப்பாலில் யாண்டும் யார்க்கும் பொதுவாய் மொழிந்தே செல்கின்றார். யாக்கிய வற்கிய ஸ்மிருதியில் சூத்திரன் தானத்தையும், கிருகஸ்தனாகிப் பிதிர்சிராத்தாதிகளையும், நமஸ்கார மந்திரங்களைச் சொல்லித் தேவயக்கிய முதலிய பஞ்சமகா யக்கியங்களையும் செய்யக்கடவனென்று வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கின்றது. அதனை இக் கலியுகத்துக்குரிய "பராசரஸ்மிருதியில்" ஆசார காண்டத்திலுள்ள சூத்திரதர்ம பிரகரணசுலோகத்தின் உரையில் ஸ்ரீமத்-மாதவாசாரியரால் எடுத்தாளப்பெற்றிருக்கிறது.

8. வேதத்தில் மூவர்க்குமே முக்கடனுளொன்றாகிய தென் புலத்தார்கட னிறுத்தற்பொருட்டுப் புதல்வனைப்பெறுதலென்னு மொழுக்கங் கூறப்பட்டிருக்கிறதெனின் அது பொருந்தாது. என்னை ?. வேதத்தின் உபாங்கம் நான்கனுளொன்றாகிய ஸ்மிருதியில் கூறியதுகொண்டு வேதத்திலும் உண்டென்பது உறுதி. ஏனெனின் வேத நோக்கத்துக்கு ஸ்மிருதி முரண்படாது. அதனை வேதாங்கம் வேதோபாங்கம் முதலிய யாவையும் ஐயந்திரிபறக்கற்றுப் பின் வேதத்தை யோதியுணர்ந்த வல்லபண்டிதரே அறியற்பாலர். மற்றை யாரறியார். மேற்கூறியாங்குள்ள பண்டிதரும் இக்காலத்தில் இல்லை. ஆகலின் தென்புலத்தார்கட னிறுத்தற்பொருட்டு முதன் மூவர்க்குமே புதல்வரைப்பெறுதலென்னு மொழுக்கம் வேதஞ்சாற்றிய தென்பது பயனில் கூற்றாம். அவ் வேதம் சதுர்த்தருக்கும் தென் புலத்தார்கட னிறுத்தற்பொருட்டுப் புதல்வரைப்பெறுத லென்னும் ஒழுக்கம் உண்டென்பதை ஓரிடத்திலாயினும் சொல்லாமலிராது.

9. இதுகாறுங் கூறிவந்த துணையானே சதுர்த்தருக்கும் பிதிர்க்கடன் செய்தல்வேண்டிப் புதல்வரைப்பெறுதலென்னு மொழுக்கம் விதியென விளங்கி விடை பலமுடையதாதலும் விடையினுரை பலமின்மையடைதலும் வெளியாம்.

அ. முத்தையமுதலி,
திருப்பாதிரிப் புலியூர் ஞானியார்
மடாலயத்துச் சுவாமிகள் மாணவன்,
பரங்கிப்பேட்டை.

ஸ்ரீ:

ஐயவினாவின்விடையுரை யாராய்ச்சியின் எதிருரை.

"செந்தமிழ்"ப் பத்தாந்தொகுதியின் பன்னிரண்டாம் பகுதியில் வெளிவந்த "ஐயவினாவின் விடையுரை" யானது விடையொடு மாறு பட்டிருப்பதாக வுணர்ந்து, பரங்கிப்பேட்டை ஸ்ரீமான்-அ. முத்தைய முதலியார் அவர்கள், "ஐயவினாவின்விடையுரை ஆராய்ச்சி" என்னும் வியாசத்தால், அவ்விடை யுரைகளின் வன்மை மென்மைகளை யாராய்ந்து விடை பலமுடையதென்றும், விடையுரை பலமில்லதென்றும் தமது துணிவை வெளியிட்டிருக்கிறார்கள்.

ஒருபொருளில் ஐயம் நிகழ்ந்துழி ஆராய்ச்சியாலே தெளிவு பிறக்கின்றமையாலும், பண்டைத்தமிழ்ப் புலவர்களும் "சங்கமிருந்து தமிழாராய்ந்தார்" என்பதனாலும் தமிழுணர்தற்கு ஆராய்ச்சி சாதனமாக வேண்டற்பாலதேயாம்.

அதுவும், "காய்த லுவத்த லகற்றி யொருபொருட்கண், ஆய்த லறிவுடையார் கண்ணதே" என்றமையால் ஆராயப்படுவதொரு பொருளை வெறுப்புவிருப்புக் கிலக்காக்காது நொதுமலாகவைத்தே நியாயவாயிலா னாராயவேண்டும்.

அங்ஙனம் செய்யு மாராய்ச்சியாற்றானே யொரு பொருளிற் பலர்க்கு மொரேதுணிவு பிறக்கின்றது. ஒரோவிடயத்தில் ஒரொருவர்க்கு வெவ்வேறு துணிவு பிறப்பது முண்டு. நியாய விரோத மின்றி வெவ்வேறுதுணிவு பிறக்குமாயின் அவையே மதபேத மாகின்றன.

அம்மதபேதங்களுள் வேண்டுவதொன்றை உடன்படல் அல்லது மறுத்தல் முதலிய புரிதலும் புலவரது செயலேயாம். ஆதலாற் பிற ரெழுதும் பொருளுரையிற் பொருந்தாமைகண்டோர் அதனை மறுத்துப் பொருந்துவதொன்றை நாட்ட நியாயவாயிலான் வாதுசெய்வதும் அறிவுளர்ச்சிக்குரியதே.

அவ்வாறு வாதுசெய்வோர்களுக்கு அவ் வாதி னிறுதியில் வெற்றி தோல்விகளும் விளைகின்றன. அவற்றுள் வெற்றி செருக்கை விளைக்கின்றது; தோல்வி மெய்யுணர்ச்சியையும் அறிவுவளர்ச்சியையும் விளைக்கின்றது. வெற்றியாலுண்டாம் செருக்கினும் தோல்வியாலுண்டாம் மெய்யுணர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் விழுமிய வாதலால், வெற்றியினும் தோல்வியே மேலானதென விரும்பத்தக்கது. ஆதலால் வெல்வதும் தோற்பதும்பற்றி யொருவர்க்கொருவர் பகையாகி யுரையாடல் விரும்பற்பாலதன்று.

இதனைச் சிறிதும் நினையாது, எதிரியை எள்ளுதல், இகழ்தல், வைதல் என்னு மிவையே சாதனமாகக்கொண்டு வாதுபுரிவதன்றி அவற்றுள் ஒன்றேனும் சிறிதும் நிகழாது நியாயத்தினின்று நழுவாது வாதுசெய்வோர் மிகவும் அரியராகின்றனர்.

ஆதலின், இதன்முன் சேர்க்கப்பட்டுள்ள "ஐயவினுவின்விடையுரையாராய்ச்சி"யுள், "மிக்கவியப்பே" என்பது தொடக்கமாக இடையிடையே யெழுதப்பட்டுள்ள சில வாக்கியங்களால் அவைசிறிது புலப்படுவேதுகொண்டு பெரிதுங்குறைவுடையதெனக் கருதல்கூடாதென்பது பற்றியே அவ்வாராய்ச்சி இச்செந்தமிழில் வெளியிடத்தக்கதாயிற்று. இது நிற்க.

வாதி யெழுதிய ஆராய்ச்சியின் முடிவான துணிவு ஐயவினுவின் விடையும் அதனுரையும் மாறுபட்டுள்ளன வென்பதும், அவற்றுள் விடை வலியுடையதும் விடையுரை வலியில்லதுமா மென்பதும், புதல்வரைப் பெறுத லென்னுமொழுக்கம் நான்குவருணத்தினர்க்கும் அறனேயா மென்பதுமே.

ஐயவினுவின்விடையின் கருத்தும் அதனுரையின் கருத்தும் ஒன்றேயாயினுமாக; வெவ்வேறாயினுமாக. அதனுல் எதிரிக்கு நேர்வதொரு லாபநட்டமு மின்றாம். விடையும் உரையும் வேறுபட்டவழியும், விடையே வலியுடையதாயினுமாக; விடையுரையே வலியுடையதாயினுமாக. அதனுலும் எதிரிக்காகும் நட்டலாப மொன்று மின்று. புதல்வரைப்பெறுதல் என்னு மொழுக்கம் இருபிறப்பாளர்க்கே யுரிய அறனயினுமாக; எல்லாவருணத்தினர்க்கு மொத்தவறனயினுமாக. அதனுலும் எதிரிக் கொருவாவுசெலவு மின்று.

ஆதலால் எதிரிக்கியல்பானே காய்தலுவத்தற் கிலக்காகாத இவ் விடயத்தில் வெறுப்பு விருப்பொன்று மின்றி மெய்யுணர்ச்சியையும் அறிவுவளர்ச்சியையும் விரும்பியே இவ்வெதிருரை யெழுதப்படு கிறது.

ஐயவினுவின் விடையுரையாராய்ச்சியின் நான்காம் பத்தியில், விடையாற் பெறப்பட்டது உரையாற் பெறப்பட்டதின் வேறுபட்ட தெனக் கூறப்பட்டிருக்கிறது.

இங்கெடுத்துக்கொண்ட ஆராய்ச்சிக்கு மூலகாரணமான வினு திருக்குறளைப்பற்றி யெழுந்ததன்று; அதற்குரையெழுதிய பரிமே லழகர் வாக்கியத்தையே பற்றியெழுந்த தென்பது வெளிப்படையாம். அதற் கிறுக்கும் விடையும் அப்பரிமேலழகர் கருத்தொடு மாறுபட லாகாதென்பது வாதிக்கும் உடன்பாடேயாம். எதனையேது விளக்கு வது அதனின் அது மாறுபடலாகா தென்பது உபயவாதிகளுக்கும் ஒப்பமுடிந்த நியாயமே. இந்நியாயம் வாதிக் குடன்பாடில்லை யென்ப ராயின் விடையின் கருத்தொடு மாறுபட்ட துரையென விடையுரை யைக் குறைகூறுவதெங்ஙனம் பொருந்தும். ஆதலாற் பரிமேலழகர் கருத்துக் கிணங்கியே ஐயவினுவிற்கு விடையிறுக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது உபயவாதிகளுக்கும் ஒப்பமுடிந்ததாம். ஆகவே விடையுரை பரிமேலழகர் கருத்தொடு மாறுபடாதிருத்தலால் அவர்கருத்தொடு மாறுபடாத விடையின் கருத்தொடும் மாறுபட்ட தில்லை யென்பது நன்குபெறப்பட்டது. ஆதலால் விடையின் மாறு பட்ட துரையெனக்கருதி வாதியினுல் அவ்வாராய்ச்சி யெழுதற்கு விவாத மூலமே யில்லையாயிற்று.

ஆயினும் பரிமேலழகர் கருத்தொடு விடையின்கருத்து மாறு படாது எதிரிக் கநுகூலமாயிருக்கிற தென்பதை நிரூபிக்கவேண்டு மெனிற் பின்வருமாற்றுல் நிரூபிக்கலாகும்.

புதல்வரைப்பெறுதல் என்னு மதிகாரத்திற்கு இருபிறப்பாளர் மூவரே யிலக்காகவும், நான்காம் வருணத்தவர் விலக்காகவும் கொள் ளுதல் பொருந்துமா? என்னும் கருத்தால் இரண்டுபொருள்கள் ஒரு வாக்கியத்தால் வினவப்பட்டன. அதற்கு, "முக்கடனேக்கி நின்றது."

"விலக்கன்று." என இரண்டு வாக்கியங்களால் விடையிறுக்கப்பட்டிருக்கிறது. இவ்விடை வாக்கியங்களில் பயனிலையொன்றே கூறப்பட்டிருத்தலால் அதற்கேற்ற எழுவாய் யாதென ஆராயின், வினாவின்கண் ஐயநிலைக்களமாய் வெளிப்பட்டுநின்ற "புதல்வரைப்பெறுதல்" என்பது பெறப்படும். இதனை, சாத்தனுக்கு மகனுண்டோவென்று வினவியவழி இல்லை என விடையிறுத்தால் மகன் என்னும் எழுவாயும் சாத்தனுக்கு என்னும் எழுவாயடையும் தானே சென்றடைந்து சாத்தனுக்கு மகனில்லையென்னும் பொருள்தோன்ற நிற்பது கொண்டு கண்டுகொள்க.

அவ்வாறே யிங்கும் விடைவாக்கிய மிரண்டும் நிரனிறையணி பற்றிப் புதல்வரைப் பெறுதல், முதன் மூவர்க்கு முக்கடன் நோக்கி நின்றது. எனவும், அவ்வொழுக்கம் நான்காம் வருணத்தவர்க்கு விலக்கன்று. எனவும் பொருள் கொள்ளுமாறு கூறப்பட்டனவாகவே காணப்படுகின்றன. இங்ஙனம் கொள்ளுவதால் பரிமேலழகருரையொடு விடை முரணுவதின்றும். ஆதலால் அதனை மறுக்கக்கருதிய வாதி பரிமேலழகரையே முதலெதிரியாகவைத்து வாதிக்கவேண்டும்.

வாதி அவரை யெதிரியாகக் கொள்ளாமையால் அதிகார முகப்பிலவரெழுதியுள்ள 'இருபிறப்பாளர் மூவ" ரென்ற சொற்றொடருக்கு நான்காம் வருணத்தவரும் பொருளென அவர்பக்கத்துக் கநுகூலமாக நிரூபிக்கவேண்டும் அங்ஙனம் நிரூபித்துவிட்டால் விடையின் பொருள் தாம்கருதியதெனக் கூறுதல் ஒருவாறு கூடும்.

அவ்வாறன்றி விடை பரிமேலழகருரையை மறுத்திறுத்ததேயாமெனக் கருதுவாராயின் அதற்குவேண்டிய சாதனங்களைக்கொண்டு சாதிக்கவேண்டும்.

சொற்றொடர்களுக்குப் பொருள் துணியுமிடத்துத் தாற்பரியவுணர்வே முக்கிய சாதனமாகும். ஆதலால் விடையின் றாற்பரியமின்னதென்பதே யிங்குத் துணியத்தக்கது. அது துணிதற் குரிய கருவிகள் பலவற்றுள்ளும் விடையிறுத்தார் வாய்மொழியே மேலாயது. ஆதலா லதனையவர்கட் கெழுதியுமறியலாம்; ஐயவினாவின்

விடையுரையைப்பற்றி யவர்களெழுதிய * வபிப்பிராயத்தாலுந் தெரியலாம்.

இவ்விரண்டனு ளொன்றாயினும் வாதிவழக்குக் கநுகூலமாயிருக்குமாயின் விடையின் உரை மாறுபட்டதெனக் கண்டு வாதி வியத்தலும் சாலும். அவ்விரண்டனு ளொன்றும் வாதிக்கநுகூலமில்லாதவரை எதிரி மற்றொன்றுகூறி மலைபவைத்ததாக வாதிசொல்லுவது பொருந்தாது.

ஆராய்ச்சியின் ஆரம்பத்தியில் "ஸ்ரீமத்—மு. ராகவையங்கார் அவர்கள் முதலிய சில்லோரச்சிட்ட திருக்குறட் பிரதிகள்" எனவாதி கரிகூறியவை பரிமேலழகருரையைக் குறித்தலால் அவையே இங்குச் சான்றாதற் குரியன. அவையெல்லாம் இருபிறப்பாளர் மூவரானு மிறுக்கத்தகுங்கடன் மூன்றனுள் தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலானல்ல திறுக்கப்படாதென வாதிக்கு விரோதமாகவும், எதிரிக்கநுகூலமாகவுமே கரிகூறி நின்றன. அவற்று ளொன்றாயினும் வாதி கருதியவாறு பிதிர்க்கட னியற்றற்குப் புதல்வரைப்பெறுதல் என்று கூறியதன்று. பிதிர்க்கடனிறுத்தற்கு என்றே கூறிநின்றன. வாதிகருத்தின்படி பிதிர்க்கடனியற்றல் என்பது திதிமுதலிய புரிதலாகக் காணப்படுகின்றது. அது பிதிர்க்கட னிறுத்தலின் வேறுயுள்ளது. பிதிர்க்கடனிறுத்தல் நன்மக்களைப் பெறவிரும்பி மனையாளுடன் கூடிவாழ்தல். இயற்றற் கிலக்காகிய திதி முதலிய பிதிர்க்கடனென்றும் விவாதவிடயமன்று. உடனெண்ணிய கேள்வி வேள்விகளைப்போல ஒருவன் தானே இறுத்தற் கிலக்காகும் பிதிர்க்கடனாகிய புதல்வரைப்பெறுதலே யிங்கு விவாத நிலைக்களனாயிருக்கின்றது. அம் முக்கடனுளொன்றாகிய கேள்வி இருபிறப்பாளர்க்கே யுரியதென்பது எதிரிக்கு முடன்பாடென்பதூஉந் தோன்ற அதனை அவர்

---

* "செந்தமிழ்த்" தொகுதி கக—பகுதி—கூல் அ௦-வது பக்கத்து உ௨-ம் வரியிற் காண்க.

ஆக்ஷேபிக்கவில்லை. எனை யிரண்டும், அத்தன்மையவாகவே வேண்டும். திருத்தணிகைச் சரவணப்பெருமாளையர் முதலியோ ரச்சிட்டனவாகச் சொல்லும் பிரதிகள் பரிமேலழகருரையன்மையால் அவை இங்குச் சான்றுதற்குரியவல்ல. ஆதலாற் சான்றுதற்குரிய பரிமேலழகருரைப் பிரதிகளில் இவ்விடத்தில் மாறுபாடில்லாமையால் விடையுரையின் றுணிவு தவறுகாது.

ஆராய்ச்சியின் ஏழாம்பத்தியில் வரைவனவெல்லாம் எதிரிக்கு முடன்பாடேயாம். அவற்றுள் ஒன்றாயினும் எதிரிவழக்குக்கு விரோதமா யிருக்கவில்லையென்பது விடையுரையால் விரித்துரைக்கப் பட்டது. அதனை யிங்கு மறித்தும் விரித்தெழுவது 'பிட்டபேடணம்' என்பதுபற்றி விட்டுவிடப்பட்டது.

மாதவசாரியரால் பராசரஸ்மிருதி யுரையில் எடுத்தாளப்பட்ட பிரமாணங்களுளொன்றும் எதிரிக்கு விரோதமுள்ளதில்லை. அவற்றாற் சொல்லப்படும் சிராத்தம் தேவபூஜை முதலியன நான்காம்வருணத் தவர்க்கும் விதிக்கப்பட்டனவென விடையுரையின்கண்ணே எதிரியால் அங்கீகரிக்கப்பட்டு விரோதமில்லையென்று காட்டப்பட்டுள்ளன.

ஆராய்ச்சியின் எட்டாம் பத்தியில் புதல்வரைப்பெறுதல் என்னு மொழுக்கம் ஏனையோர்க்கும் வேதத்தில் விதிக்கப்பட்டதெனத் துணியக்கருதிச் சில வாக்கியங்கள் எழுதப் பட்டிருக்கின்றன. அவற்றுள், "ஸ்மிருதியிற் கூறியதுகொண்டு வேதத்திலு முண்டென்பது றுதி" யென்று கூறியதனுல் ஸ்மிருதியிற் கூறப்பட்டதாகச் சொல்லும் சிராத்தாதிகளைத் துணிவதாலெதிரிக்கு விரோதமில்லை.

"வேதநோக்கத்துக்கு ஸ்மிருதிநோக்கம் முரண்படாது." அதனை "வேதாங்கம் வேதோபாங்கம் முதலிய யாவையும் ஓதியுணர்ந்த வல்ல பண்டிதரே யறியற்பாலர்" என்றெழுதப்பட்டிருக்கிறது. வாதி அதனை யறிந்தமைதோன்றக் கூறுகின்றமையால் அவர் அங்ஙனம் 'வல்ல

பண்டிதராயிருந்துகொள்வதில் எதிரிக்கு ஆக்ஷேப மில்லை. ஆயினும், அங்ஙனம் வல்ல பண்டிதரல்லாதாரும் அறிந்துகொள்வரெனக் கருதியே வாதி யதனைச் சொல்லியபடியால், எதிரியாலு மறியத்தகுமென்பதும் வாதிக்குக் கருத்தாம் என்பதற்கு அவர் கூற்றே சான்றாகின்றது.

மற்றையார் அறியார் என்றதில் மற்றையார் என்ற குறிப்பால் எதிரி யங்ஙனம் வல்ல பண்டித ரல்லரென்பது போதரும். எதிரியின் கொள்கையு மதுவேயாகலின் அது எதிரிக் கிசைந்தபொருள் சாதித்தல் என்னும் பக்கப்போலியாம்.

"மேற்கூறி யாங்குள்ள பண்டிதரு மிக்காலத் தில்லை" யென்று சொல்லப்பட்டிருக்கிறது. தமதுகூற்றால் அங்ஙனம் வல்ல பண்டிதரெனப் பெறப்பட்ட வாதி தாமே யிருக்கவும் இல்லையென்று கூறுதல் முன்னொடுபின் மலைதலாம்.

"தென்புலத்தார்கடனிறுத்தற்பொருட்டுப் புதல்வரைப்பெறுதல் என்னு மொழுக்கம் முதன் மூவர்க்கே வேதம் சாற்றியதென்பது பயனில் கூற்றாம்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. பயன் பொருள் என்பன ஒருபொருட் சொற்களாதலாற் பொருளில்லாத பொய்யுரையாமாயின் அது பயனில் கூற்றென்னத் தடையில்லை. யசுர்வேதத்தின் மூன்றாங் காண்டத்தில் "பிறக்கும்பொழுதே பிராமணன் மூன்று கடனொடு பிறக்கிறான். கெள்வியான் முனிவர்கடனையும், வேள்வியாற் றேவர்கடனையும், மக்கட்பேற்றாற் பிதிர்கடனையும் இறுக்கிறான்". என்ற பொருளுடைய வாக்கியங்களுள்ளன. இவ் வாக்கியங்களைப் பராசரஸ்மிருதியுள் ஆசாரகாண்ட வ்யாக்யானத்தில் வாதி கரி கூறிய மாதவாசார்யராலேயே யெடுத்துக் காட்டப்பட்டுள்ளன. இங்கு அவ் வேதவாக்கியத்தில் பிராமண னென்றது இரு பிறப்பாளனையென வுணர்க. இவ்வாறு திருவள்ளுவரும் இருபிறப்பாளர்நூல்

என்பார் அந்தணர்நூலென்றுகூறுதலுங்கண்டுகொள்க. வேதநோக்கத்துக்கு ஸ்மிருதி முரண்படாதென்ப துடன்பாடெனக் கொண்டவாதியால் இவ் வேதத்திற்கு விரோதமாய்த் தமது பக்கத்திற் கநுகூலமாக ஸ்மிருதி கூறியதென நிரூபித்தல் எங்ஙனம் கூடும். ஆதலால் வேதங் கூறியதென் றெதிரிகூறியது பயனில் கூற்றின்றும்.

ஏனையோர்க்கும் அவ்வொழுக்க முண்டென்பதனை வேத மோரிடத்திலாயினுஞ் சொல்லாமலிராது. என்று எழுதப்பட்டிருக்கிறது. வாதிக்காதரவாக, வேதம் ஓரிடத்தினும் சொல்லாமலிராது என்று சொல்லுவதைக்காட்டிலும், எதிரிக்காதரவாக மூன்றுங் காண்டத்திற் சொல்லியிருக்கிறதென் றெடுத்துக் காட்டியிருப்பது வலிமையுடையதா யிருக்கிறது.

முடிவுரையில் விடை பலமுடையதாதலும் விடையினுரை பலமின்மையடைதலும் வெளியாமென்று எழுதப்பட்டிருக்கிறது. விடையும் உரையும் மாறுபட்டவழியன்றோ அவற்றின் வன்மை மென்மைகளைச்சீர்தூக்கவேண்டும்; அவ்வேறுபாடு நிலைபெறுதவழிச் சீர்தூக்கியதிற் பயனென்னை ? வேறுபாடு நிலைபெற்றவழியும் வலியுடையது வெல்லும் என்பதும், சமபலமுடையது மதபேதமாகுமென்பதும் நியாயசம்மதமாம்.

திரு. நாராயணையங்கார்,

பத்திராதிபர்.

முகவுரைப்பெயர்கள்.

"முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம்."

நூற்றிறன் முதலியன அந்நூன்முகத்தே உரைத்தலின் முகவுரை யெனப்பட்டது. பதிகம் என்பது பிரதிகம் என்னும் வடமொழிச்சிதைவு. அதன்பொருள் முகம். அதுவும் முகவுரை யென்னும் பொருட்டு. நூன்முகமென்பதும் அப்பொருட்டேயாம்.

நூற்புறமாகிய முகத்தே உரைக்கப்படுதலின் புறவுரை யெனப்பட்டது. தந்துரை நூலுரை. பாயிரமென்பதற்கு இளம்பூரணர் புறவுரை யென வுரை யுரைத்தனர். அது பஹிர் என்னும் வடமொழியடியாகவந்தது. பாஹிர் என்னும் தத்திதாந்தம் அம் பெற்றுப் பாஹிரமாகி மஹேந்திரம் மயேந்திரமானாற்போலப் பாயிரமாயிற்று. பஹிர் - புறம். ஆதலின், புறவுரை பாயிரமென்பன வொருபொருட் சொற்களாம்.

இனி ஆராயக்கிடப்பன அணிந்துரை புனைந்துரை யென்னுஞ் சொற்களே. அணிந்துரை புனைந்துரை என்னுஞ் சொற்களிலே யுள்ள உரை என்னுஞ் சொல் பெயர். அப்பெயர்ச்சொல்லை விசேடித்து நிற்கும் அணிந்து புனைந்து என்பனவற்றை வினையெச்சங்களாகக்கொண்டு உரை கூறப்பட்டுவருகின்றது. அவ்வுரை பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. பெயர்ச்சொல்லை வினையெச்சம் விசேடித்து நில்லாதன்றே. அதுவுமன்றி ஒட்டி ஒருமொழியாக்கும் வகையில் வினையெச்சம் ஒட்டாமாறுமில்லை. அதனாலும் அவை வினையெச்சங்களாகா.

அணிந்து புனைந்து என்பனவற்றைப் பெயர்ச் சொற்களாகக் கொள்வது தகுதியாம். அவை அணி புனை யென்னும் பகுதிகளினடியாக வந்த பெயர்கள். வகு என்னுமடியாக வகுந்து என்னும் பெயரும் சிதையென்னு மடியாகச் சிதைந்து என்னும் பெயரும் வந்தாற்போல வந்த பெயர்களாம். வகுந்துவழி. சிதைந்துவழு. அணிந்துரை அணிந்தாகியவுரை. புனைந்துரை புனைந்தாகியவுரை.

யாழ்ப்பாணம்,
நாவலர்கோட்டம்.
13—4—13.

இங்ஙனம்,
ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை.

உ

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

இச் சங்கத்தார் பரிதாபி-௵ தைமீ 8, 9, 10-ம் தேதிகளில் நடாத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிய மாணாக்கர்களின் விவரம்.

பிரவேசபண்டித பரீக்ஷை.

II-வது வகுப்பு.

1. 6. மு. வடிவேற்பிள்ளை, மதுரைத் தமிழ்ச்சங்கம் கலாசாலை மதுரை.

2. 7. R. கிருஷ்ணசாமி, மதுரைத் தமிழ்ச்சங்கம் கலாசாலை மதுரை.

3. 10. K. P. பொன்னம்பலம்பிள்ளை, காட்டுப்புத்தூர், திருச்சிறாப்பள்ளி ஜில்லா.

4. 8. S. இராகவன், மதுரைத் தமிழ்ச்சங்கம் கலாசாலை, மதுரை.

5. 15. அ. பொன்னண்ணா, ஆலங்குடி பிராஞ்சுபோஸ்டு, திருச்சிறாப்பள்ளி.

6. 9. P. S. மாணிக்கம்பிள்ளை, முத்துசெட்டிதெரு, திருப்பத்தூர், வட ஆற்காடு ஜில்லா.

P. S. Subramania Aiyer,
President,
Madura Tamil Sangam.

29—4—13.

மதுரைத் தமிழ்ச்சங்கம்.

இச் சங்கத்தார் 1913-௵ மார்ச்சு௴ 1-ம் தேதியில் நடாத்திய ஆங்கில கலாசாலைத் தமிழ்ப் பரீக்ஷைகளிற் றேறிப் பரிசும் யோக்கியதா பத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விவரம்.

GOVERNMENT ORIENTAL MANUSCRIPTS LIBRARY

பி. ஏ. பரீக்ஷை.

II-வது வகுப்பு.

1. 1. S. R. ஸ்ரீநிவாஸன், S. P. G. காலேஜ், திருச்சினாப்பள்ளி.

எப். ஏ. பரீக்ஷை.

I-வது வகுப்பு.

1. 17. உ. வே. கோவிந்தசாமி, S. P. G. காலேஜ், திருச்சி. (முதற்பரிசு ரூ 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்.)

2. 20. T. S. கந்தசாமி, S. P G. காலேஜ், திருச்சினாப்பள்ளி. (இரண்டாவது பரிசு ரூ 35.)

II-வது வகுப்பு.

1. 5. V. S. இராமசுவாமி, பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.

2. 6. K. திருநாராயணன், ஷை ஷை.

3. 12. Z. அருளப்பன், ஸ்காட் கிறிஸ்தவ காலேஜ், நாகர்கோயில்.

4. 19. A S. நடராஜன், S. P. G. காலேஜ், திருச்சினாப்பள்ளி.

5. 14. K. S. கிருஷ்ணமூர்த்தி, S. P. G. காலேஜ், திருச்சி.

6. 3. M. A. ஸ்ரீநிவாஸன், வெஸ்லிகாலேஜ், ராயப்பேட்டை, சென்னை.

7. 7. S. V. சுப்பிரமணியன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

8. 8. S. C. ஹென்றி, ௸ ௸.

9. 4. V. இராமாநுஜன், ௸ ௸.

10. 16. M. V. மகாதேவன், S. P. G. காலேஜ், திருச்சி.

மெற்றிக்குலேஷன்.

I-வது வகுப்பு

1. 96. S. நாவலடி வெங்கையர், முனிஸிபல் கலாசாலை, சேலம். முதற் பரிசு ரூ 30. (வெள்ளிப்பதக்கமும் மீத ரூபாவும்.)

II-வது வகுப்பு.

1. 85. T. K. கோபாலன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.

2. 76. P. தியாகராஜன், நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.

3. 97. S. V. வேணுகோபால், முனிஸிபல் காலேஜ், சேலம்.

4. 123. ஜெம்புநாதன் c/o. ஹெட்மாஸ்டர், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சினாப்பள்ளி.

5. 47. S. முத்துகிருஷ்ணன், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

6. 50. K. S. இராமசுவாமி, வெஸ்லி காலேஜ், சென்னை.

7. 89. A. இராஜப்பன், His Highness, the Maharaja's College, புதுக்கோட்டை.

8. 126. P. மேரி தேவதாஸன், மஹாராஜாஸ் கெர்ல்ஸ் காலேஜ், அண்டு H. G. S. ஸ்கூல், திருவநந்தபுரம்.

9. 41. M. குழந்தைவேலு, அர்ச்சு சூசையப்பன் கலாசாலை, மஞ்சக்குப்பம்.

10. 48. K. P. சேஷாத்திரி ஐயங்கார், முத்தியாலுப்பேட்டை ஹைஸ்கூல், சென்னை.

11. 68. S. வைத்தியநாதன், முனிஸிபல் ஹைஸ்கூல், மாயவரம்.

12. 144. M. S. ஸ்ரீநிவாஸன், வூரீஸ்காலேஜ், வேலூர்.

13. 53. K. சேஷாசாரி, ஹிந்துஹைஸ்கூல், திருவல்லிக்கேணி.

14. 105. S. கோவிந்தன், கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சை.

15. 122. M. K. இராமசந்திரன் c/o. ஹெட்மாஸ்டர், நாஷனல் ஹைஸ்கூல், திருச்சிறுப்பள்ளி.

16. 71. G. எதிராஜலு, நாஷனல் ஹைஸ்கூல், மன்னார்குடி.

17. 83. R. ஜெகன்னாதன், பிண்டிலேகாலேஜ், மன்னார்குடி.

16. 111. C. P. கேசவலு, கல்யாணசுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சை.

19. 128. S. மார்க்கசகாயம், ஸ்ரீ மகன்த் ஹிந்து ஹைஸ்கூல், வேலூர்.

P. S. Subramania Aiyer,
President,
29—4—1913. Madura Tamil Sangam.

புத்தக வரவு.

(1) யோக உபந்யாஸங்கள்:—இது, மாதா ஸ்ரீ அந்நிபெஸண்டு அம்மையால் ஆங்கிலத்திற் செய்த உபந்யாஸங்களின் தமிழ்மொழி பெயர்ப்பு. இதில் யோகசாஸ்திரத்தின் இயல்பும், பலதர்ஸனங்களின் முடிபும், யோகம் ஒரு சாஸ்திரம் என்பதும், அது அப்யசிக்கத்தக்க தென்பதும் ஆகிய விஷயங்களுடன் உபந்யாஸஞ் செய்யுமுறையில் அவற்றினிடையே யுணர்த்தவேண்டிநின்ற பல அரிய விஷயங்களும் விரித்துரைத்து முடிக்கப்பெற்றிருக்கின்றன. இவையெல்லாம் இந்தியாரகியுள்ள தமிழ்மக்களும் எளிதினுணரும்படி மதுரை பிரம்மஞான ஸபைத்தலைவர் ஸ்ரீமத்—ப. நாராயணையர் அவர்களால் தெளிவான தமிழ்நடையில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்டிருக்கிறது. இதன்விலை அணா 12.

(2) ஞானமிருதம்:—இது கும்பகோணம் ஸ்ரீமத்—சு. இராமஸ்வாமி ஐயர் அவர்களால் எழுதப்பட்டதொரு புனைகதை. பஞ்சாக்ஷர மஹா மந்திரத்தை அஸ்திவாரமாகக்கொண்டு எழுதப்பட்டதாக முகவுரையால் விளங்குகிறது. இதன்விலை அணா 10.

வேண்டியோர் ஆக்கியோர்கட்கெழுதிப் பெறலாம்.

☞ மேற்கண்டபுத்தகங்களும், வினைப்பகுபத விளக்கமும் வழக்கப்படி பாண்டியன் புத்தகசாலையில் சேர்க்கப்பட்டன.

பத்திராதிபர்.